மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெரம்பூர் இறைச்சிக் கூடம், தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு இறைச்சி நிறுவனம், சென்னை மாநகராட்சியும் தமிழ்நாடு அரசாங்கமும் சமபங்குதாரர்களாக உள்ள ஒரு நிறுவனம். ஏற்கெனவே இது மாநகராட்சியால் நிர்வகிக்கப்பட்ட ஒன்று. தற்சமயம் மீண்டும் அதை மாநகராட்சிக்கு ஒப்படைக்கின்ற ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில இல்லை என்பதை தெரி வித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவினுடைய கீழ்க்காணும் அறிக் கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:

(1) மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் தொழிற் பேட்டைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு 1984-85-ஆம் ஆண்டு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்த குழுவின் இரண்டாவது அறிக்கை.

(2) கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு 1986-87;ஆம் ஆண்டில் அளித்த பரிந் துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக் கைகள் குறித்த குழுவின் மூன்றாவது அறிக்கை.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்.

3. தகவல் கோரல் — தொடர்ச்சி.

(ஒ) பின்னி நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டுமெனக் கோரும் மனு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வரதராசன் அவர்கள் தான் கொடுத்த மனு தொடர்பாக ஒரு தொடர்.